விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC)**

NERDC

# வெற்றிடங்கள்

NERDC என்பது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் வரும் இலங்கையில் பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பின் முன்னணி நிறுவனமாகும். NERDC தேசிய முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் அறிவுபூர்வமாக சவாலான பல்வேறு பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது மற்றும் தீவு முழுவதும் உள்ள தொழில்களுக்கு பல்வேறு தொழில்நுட்ப சேவைகளை மேற்கொள்கிறது.

பின்வரும் பதவிக்கு தகுதிவாய்ந்த, துடிப்பான, முன்முயற்சியுள்ள மற்றும் புதுமையான இலங்கை நிபுணர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## பணிப்பாளர் நாயகம் - HM 2-3

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்: (பின்வரும் 01 அல்லது 02)**

01. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் 1ஆம் வகுப்பு அல்லது 2ஆம் வகுப்பு மேல் பிரிவு சகிதம் 4 வருடகால பொறியியல் இளமாணிப் பட்டம் மற்றும் இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படும் தொழில்சார் நிறுவனத்தின் (பட்டயம்) கோப்பரேட் அங்கத்துவம் அல்லது முதுமாணி மட்டத்தில் (Master Level) பட்டப் பின்படிப்புப் பட்டம்.

    அல்லது

02. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகத்தின் 4 வருடகால பொறியியல் இளமாணிப் பட்டம் மற்றும் முதுமாணி மட்டத்தில் (Master Level) பட்டப் பின்படிப்புப் பட்டம் மற்றும் இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படும் தொழில்சார் நிறுவனத்தின் (பட்டயம்) கோப்பரேட் அங்கத்துவம்.

**அனுபவம்** : முதலாம் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கீர்த்தி வாய்ந்த நிறுவனமொன்றில் 20 வருடகால அனுபவம், இதில் 10 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் மற்றும் ஐந்து வருட காலம் பட்டயப் பணி அனுபவம்.

**வயதெல்லை** : 30 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(அரச கூட்டுத்தாபனம் / சபைகள் / ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்கள் உட்பட பொதுத் துறையில் தற்போது பணியில் உள்ள தனிப்பட்டவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**

NERDC நிறுவனத்தில் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக ஐந்து (05) வருடகால அனுபவம்.

**சம்பள அளவு : HM 2-3 - 2025 : ரூபா 173,000 - 12 X 4,850 - 231,200**

(01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும் + தொழில்சார் கொடுப்பனவுகள், தொடர்பாடல் கொடுப்பனவுகள், வாழ்க்கைச் செலவுப் படி உட்பட அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகள்)

**ஏனைய நன்மைகள்:**

- ஊழியர் சேமலாப நிதிக்கு சம்பளத்தின் 15% NERDC பங்களிப்புச் செய்யும் என்பதுடன் ஊழியர் 10% பங்களிப்புச் செய்ய வேண்டும்.
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு சம்பளத்தின் 3% NERDC பங்களிப்புச் செய்யும்
- அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட 50,000.00 ரூபா போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது தொடர்புடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் NERDC நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம், எரிபொருள் கொடுப்பனவு.
- NERDC நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மருத்துவ திட்டத்தின் பிரகாரம் மருத்துவ பற்றுச்சீட்டுகளை மீளச் செலுத்துதல்
- தொடர்புடைய அரசாங்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் / சலுகைகள் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுறுத்தல் திகதி :** 2026-04-19.

இரண்டு உறவினர்கள் அல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் கல்வி, தொழில்முறை மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் முழுமையான சுய தரவை வழங்கும் விண்ணப்பங்களை இறுதித் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். பொதுத்துறை, அரச நிறுவனங்கள்/ சபைகள் / நியதிச்சட்ட அமைப்புகளில் பணியாற்றும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டுமானால், அந்தந்த நிறுவனத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும்.)

**செயலாளர்,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு,**
**3ஆம் மாடி,**
**செத்சிறிபாய கட்டம் 1,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி : 011-2 879 410, 011- 2 879 404**

**இணையதளம் : www.most.gov.lk**